பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 04 2026** **6 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் தீவிரம் அடைந்துள்ளன.

2. திமுக ஆட்சியில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி அதிகரித்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில்தான் தொழில் முதலீடுகளையும் வேலைவாய்ப்புகளையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் நலன்களைக் காக்க நாம் தமிழர் கட்சி பாடுபட்டு வருவதாக அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு சீமான் கூறியுள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<>>>>

**தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் தீவிரம் அடைந்துள்ளன.**

**மாநிலம் முழுவதும் 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளது.**

**அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 79 வேட்பாளர்களும், குறைந்தபட்சமாக அம்பாசமுத்திரம் தொகுதியில் 5 வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர்.**

**சென்னையைப் பொறுத்தவரை 16 தொகுதிகளில் மொத்தம் 419 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.**

**சென்னையில் அதிகபட்சமாக பெரம்பூர் தொகுதியில் 47 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.**

**அடுத்தகட்டமாக மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் வேட்பாளர்களின் பெயர், புகைப்படம் மற்றும் சின்னங்களைப் பொறுத்தும் பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொள்ள உள்ளது.**

சென்னையில் 16 தொகுதிகளில் 4 ஆயிரத்து 85 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றில் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியில் எந்த வளர்ச்சியும் ஏற்படவில்லை என்று பிஜேபி மூத்த தலைவர் திரு பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவையில் நேற்றிரவு பிரச்சாரம் மேற்கொண்ட அவர், திமுக ஆட்சியில் முறைகேடுகள் அதிகரித்ததாக கூறினார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கினாலும், அந்தத் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் திமுக அரசு செயல்பட்டுள்ளதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

திமுக ஆட்சியில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி அதிகரித்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் நேற்று நடைபெற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், திமுக ஆட்சியில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்கள் தொழில் துறையின் மையமாக மாறியுள்ளதாகத் தெரிவித்தார்.

திமுக ஆட்சியின் செயல்பாடுகளால் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் உருவாகியுள்ளது என்று திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில்தான் தொழில் முதலீடுகளையும் வேலைவாய்ப்புகளையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சென்னை திருவிக நகரில் நேற்றிரவு பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நாடு முழுவதும் கல்வி வளர்ச்சியில் 2030-ம் ஆண்டு அடைய வேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சியின் செயல்பாடுகளால் 2019-ம் ஆண்டிலேயே எட்டப்பட்டுவிட்டதாக தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் மக்கள் நல திட்டங்கள் தொடர திமுக ஆட்சி நீடிக்க வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலாளர் திரு வைகோ கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பெண்கள், விவசாயிகள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரின் நலனுக்காகவும் திமுக அரசு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மூத்த தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் அவிநாசி தொகுதியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நலத்திட்டங்களை முறையாக செயல்படுத்தவும், விவசாயிகள் நலன்களைக் காக்கவும் தமிழகத்தில் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆட்சி அமைய வேண்டும் என்று கூறினார்.

<<<<>>>>

திமுக அரசின் நலத் திட்டங்களால் அனைத்துத் தரப்பு மக்களும் பயன் அடைந்துள்ளதாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கடந்த 5 ஆண்டுகளில் பெண்களுக்கு பல நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மீண்டும் திமுக ஆட்சி அமைந்தால் தற்போது வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்று திருமதி பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு மக்கள் நலனில் அக்கறை செலுத்தவில்லை என்று அமமுக பொதுச்செயலாளர் திரு டிடிவி தினகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தேனியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், சொத்து வரி உயர்வு,மின் கட்டண உயர்வு போன்றவை மக்களை பாதித்துள்ளதாக கூறினார்.

மாநிலத்தில் பெண்கள், குழந்தைகள், முதியோர் என அனைவருக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக திரு. டி.டி.வி. தினகரன் தெரிவித்தார்.

<<<<>>>>

திமுக ஆட்சியில் சென்னை நகரின் உள்கட்டமைப்பை மேம்படுத்த அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அக்கட்சியின் இளைஞரணிச் செயலாளர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அண்ணா நகரில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், சென்னை நகரில் பாலங்கள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் போன்றவை திமுக ஆட்சியில் தான் அதிகம் உருவாக்கப்பட்டதாகக் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் நலன்களைக் காக்க நாம் தமிழர் கட்சி பாடுபட்டு வருவதாக அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு சீமான் கூறியுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தமிழகத்தில் திமுக, அதிமுக ஆகிய கட்சிகளின் ஆட்சியில் மக்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்றும் மாநில உரிமைகள் நிலைநாட்டப்படவில்லை என்றும் கூறினார்.

மாற்றத்தை ஏற்படுத்த, மக்கள், நாம் தமிழர் கட்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று திரு சீமான் கேட்டுக் கொண்டார்.

<<<<>>>>

**இனி தேர்தல் களம்...**

**(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)**

**சட்டப்பேரவை தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது திருவள்ளூர் மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகள்.**

**(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 92 செகண்ட்ஸ்)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

**ஆர்த்தடாக்ஸ் ஈஸ்டரையொட்டி யுக்ரைனில் 32 மணி நேர போர்நிறுத்தத்தை ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் அறிவித்துள்ளார்.**

**-------------**

**தேவநாகரி மற்றும் பாரசீக எழுத்துருக்களில் உருவாக்கப்பட்ட சிந்தி மொழி அரசியல் சாதனத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் புது தில்லியில் இன்று வெளியிடுகிறார்.**

**-------------**

மேற்கு ஆசிய நாடுகளில் இருந்து இதுவரை 8 லட்சத்து 15 ஆயிரம் இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------

மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக கத்தார் சென்றுள்ளார்.

-------------

பழங்குடியினர் நல அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய பழங்குடியினர் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் 25-வது நிறுவன நாள் விழாவில் மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ஜூவல் ஓரம் இன்று பங்கேற்கிறார்.

-------------

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்குப் பின் உத்தரப்பிரதேசத்தின் இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

-------------

தமிழகத்தில் ஒன்று முதல் 9-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கோடை விடுமுறை வரும் 17-ம் தேதி தொடங்கும்

எனவும், ஜூன் ஒன்றாம் தேதி பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும் என்றும் பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

-------------

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் **100** சதவீத வாக்குப்பதிவை வலுயுறுத்தும் விதமாக படகுகளளில் கடலுக்குள் சென்று மூவர்ண பலூன்களை பறக்கவிடும் நிகழ்வு நடைபெற்றது.

-------------

சென்னையில் நேற்று நடத்தப்பட்ட வாகன சோதனைகளின் போது, உரிய ஆவணங்ளின்றி கொண்டு செல்லப்பட்ட ஒரு லட்சத்து **51** ஆயிரம் ரூபாய் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் லக்னோ அணி கொல்கத்தா அணியை வென்றது.

கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் லக்னோ அணி **3** விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

-------------

**ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் ஜம்ஷெட்பூர் - மும்பை அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.**

**<<<<The End>>>>**